**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.125-2024 DW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுரேஷ் குமார் | க/பெ./ த/பெ | வடிவேல் |
| ஊர்: | : | காளையார்கோவில் | சமயம்: | |
| வயது: | : | 42/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | IT கம்பெனியில் வேலை | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.01.2026**

---------------------------------------------------------------------------------------------------

29.01.2026
முதல் விசாரணை :

1) நான் MBA படித்துள்ளேன். எதிரி அழைத்ததன் பேரில் ம.சா.ஆ.2 ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். புகார்தாரர் எதிரிக்கு ரூ. 1 லட்சத்து 21 ஆயிரம் கடனாக கொடுத்தார். அப்போது எதிரி பூர்த்தி செய்யப்படாத 2 காசோலைகளை புகார்தாரருக்கு கொடுத்தார். மேற்படி கடனுறுதி பத்திரத்தில் புகார்தாரர் அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். அப்போது எதிரி, எனது மனைவி காயத்திரி, எதிரியின் மகள் மேலும் புகாதாரரின் அலுவலகத்தில் மேலும் 2 நபர்கள் இருந்தார்கள். மேற்படி ம.சா.ஆ-2 ஆவணத்தில் உள்ள விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. அன்றைய தேதியில் காசோலை மற்றும் ம.சா.ஆ.2 ஆவணம் மட்டுமே கொடுக்கப்பட்டது. கடனுறுதிசீட்டு எதுவும் அப்போது கொடுக்கப்படவில்லை. நான் அதில் கையொப்பமும் செய்யவில்லை. மாரிமுத்து என்பவர் சொல்லிதான் மேற்படி கடனுறுதி பத்திரத்தில் கையொப்பம் செய்தேன். மேலும் புகார்தாரரிடம் எதிரி பெற்ற கடன்

**தொகையை எதிரி அவரது கணவர் அனுப்பிய பணத்தில் இருந்து கடன் தொகை முழுவதையும், செலுத்திவிட்டார். இதை எதிரி சொல்லி நான் அறிந்து கொண்டேன். மேற்படி கையொப்பம் செய்ததற்கு நான் பணம் எதுவும் பெறவில்லை.**

**குறுக்கு விசாரணை** ஒத்தி வைக்கப்படுகிறது.

**சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.29 17:07:55 +0530

**நீதித்துறை நடுவர்,**

**விரைவு நீதிமன்றம், காரைக்குடி (மு.கூ,பொ)**